**கூட்டம் எண்.5/2023** **நாள்.** 30.06.2023

# சாதாரணக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் **ஜூன்**-2023 மாதத்திற்கான சாதாரணக்கூட்டம் 30.06.2023ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் மே-2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்**.383 **நாள்**.30.06.2023

**பார்வையிடப்பட்டது.**

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் மே-2023ம் மாதத்திய பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| மே-2023 | - | 36 | - |

**தீர்மானம் எண்**.384 **நாள்**.30.06.2023

**பார்வையிடப்பட்டது.**

<u>பொருள் எண்.3</u>

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் மே-2023ம் மாத கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| | கேட்பு ரூ லட்சத்தில் | வசூல் ரூ.லட்சத்தில் | நிலுவை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| வரியினம் | 200.73 | 19.90 | 180.8 |
| காலியிட வரி | 26.54 | 25.66 | 0.88 |
| வரியில்லா இனம் | 12.00 | 0.74 | 11.26 |
| குடிநீர் கட்டணம் | 42.71 | 3.35 | 39.36 |
| திடக்கழிவு மேலாண்மை வரி | 43.06 | 3.33 | 39.73 |

**தீர்மானம் எண்.385 நாள்.30.06.2023**

**பார்வையிடப்பட்டது.**

<u>பொருள் எண்.4</u>

குன்றத்தூர் நகராட்சியின் மே-2023ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

மே -2023 - செ.சீ.எண்.44 முதல் 109 வரை (பணிகள்)

செ.சீ.எண்.6 முதல் 15 வரை – குடிநீர் விநியோகம்

**தீர்மானம் எண்.386 நாள்.30.06.2023**

**பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.5</u>**

குன்றத்தூர் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ம் ஆண்டின் கீழ் வார்டு எண்.30 – நத்தம் பகுதி, நில அளவை எண்.757-ல் அறிவுசார் மையக் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி அறிவுசார் மையத்திற்கு மும்முனை மின் இணைப்பு வேண்டி மின்வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து மதிப்பீட்டுத் தொகை ரூ.33236/-செலுத்தக் கோரி கேட்பு வரப்பெற்றது.

| வ.எண். | விவரம் | விண்ணப்ப எண். / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022.2023 - வார்டு எண்.30 – நத்தம் பகுதி, நில அளவை எண்.757-ல் அமைக்கப்பட்டு வரும் அறிவுசார் மையத்திற்கு மும்முனை மின் இணைப்பு வழங்குதல் | 200092340623l668 / 01.06.2023 | 33236/- |

மேற்படி அறிவுசார் மையத்திற்கு மும்முனை மின்இணைப்பு பெறுவதற்கு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.33236/- செலுத்த 05.06.2023 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.197/2023/இ1)**

**தீர்மானம் எண்.387 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.6</u>**

குன்றத்தூர் நகராட்சியின் ஆணையர் பயன்பாட்டிற்கான பொலிரோ வாகனம் எண்.TN 85 R 9451 மூன்றாம் நிலை பழுதுநீக்கம் செய்வதற்கு M/s.Automotive Manufacturers Pvt Ltd நிறுவனத்திடம் 07.06.2023 அன்று ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் வாகனத்தை ஆய்வு செய்ததில் வாகனம் அதிக அளவு பழுதடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு மேற்படி வாகனம் பழுதுநீக்கம் செய்து பட்டியல் வரப்பெற்றது.

| வ. எண் | விவரம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆணையர் பயன்பாட்டிற்கான பொலிரோ வாகனம் பழுதுநீக்கம் செய்தது | M/s.Automotive Manufacturers Pvt Ltd, Gerugambakkam | RO24L001150 / 07.06.2023 | 11508.73 |

மேற்காணும் விவரப்படி பொலிரோ வாகனம் பழுதுநீக்கம் செய்தமைக்கு அவசர அவசியம் கருதி M/s.Automotive Manufacturers Pvt Ltd நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.11508.73/-ஐ 08.06.2023 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1582/2023/பி1)**

**தீர்மானம் எண்.388 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சியில் Airport Authority-ன் சுற்றுச்சூழல் குழு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகம் ஆய்வு செய்யப்பட்டதில் திறந்தவெளி குப்பை கிடங்கில் குப்பைகள் கொட்டப்படுவதால், அது பறவைகளை ஈர்ப்பதின் காரணமாக விமான விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே சென்னை விமான நிலையத்தை சுற்றி 10 கி.மீ. சுற்றளவில் திறந்தவெளி குப்பை கிடங்குகள் செயல்படுத்த கூடாது என நேரில் அறிவுறுத்தப்பட்டது.

தற்போது ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்பட உள்ளதால் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் வரை அவசர அவசியத்தினை முன்னிட்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகத்தில் உள்ள குப்பைகளை தனியார் நிறுவனத்தின் டிப்பர் லாரி அகற்றுவதற்கும் இச்செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் நகரமன்ற தீர்மானம் எண்.312 நாள்.31.03.2023ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்படி பணியினை தொடர்ந்து (04.05.2023 முதல் 06.05.2023 வரை) (பில் எண்.20134 முதல் 20425 வரை) செய்து முடித்தமைக்கு இறுதி பட்டியல் தொகை ரூ.920000/-ஐ ஒப்பந்ததாரர் திரு.N.ஹேமபூசனம் என்பவருக்கு 31.05.2023 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.197/2023/எச்1)**

**தீர்மானம் எண்.389 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.8**

குன்றத்தூர் பேரூராட்சியில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களாக 1.திரு.பா.முருகன் என்பவர் - 01.04.1997 முதல், 2.திரு.பா.ராஜா என்பவர் - 14.05.1997 முதல், 3.திரு.மு.சுப்பிரமணி என்பவர் - 02.06.1997 முதல் 4.திரு.கோ.டில்லிகுமார் என்பவர் – 01.07.1997 முதல், 5.திரு.சி.செல்வகுமார் என்பவர் - 01.07.1997 முதல், 6.திரு.ம.முருகன் என்பவர் – 01.10.1997 முதல், 7.திரு.என்.பக்கிரி என்பவர் – 01.01.1998, 8.திரு.ப.மனோகரன் என்பவர் – 01.04.2000 முதல் இப்பேரூராட்சியில் அவ்வப்போது பணியாற்றி வந்ததை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண். W.P.No.24637/2001ன் மூலம் தங்களை ஏற்றமுறை ஊதியத்தில் நியமனம் செய்ய வழக்கு தொடரப்பட்டு இவ்வழக்கில் 09.01.2002 அன்றைய பல்வகை மனு எண்.36541/2001ன்படி அசல் வழக்கு முடியும்வரை மனுதாரர்களுக்கு சாதகமாக இடைக்கால தடை விதித்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து 2001 முதல் தொடர்ந்து தினக்கூலியாக பணிபுரிய அனுமதிக்கப்பட்டு, இதே வழக்கு 24.07.2007 தேதிய இறுதி தீர்ப்பில் மேற்படி மனுதாரர்களின் மனுவினை தள்ளுபடி செய்து தீர்ப்புரைக்கப்பட்டது.

அதன்படி மேற்படி 8 தினக்கூலி பணியாளர்களை செயல் அலுவலர், குன்றத்தூர் பேரூராட்சி உத்திரவு ந.க.எண்.700/2001 நாள்.13.09.2007ன்படி பணி நீக்கம் செய்யப்பட்டது. குன்றத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் பணிநீக்க உத்தரவினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.W.P.No.30670/2007ன்படி மேற்படி 8 தினக்கூலி பணியாளர்கள் பணி நிரந்தரம் கோரி வழக்கு தொடர்ந்தனர். மேற்படி வழக்கில் 25.09.2007 தேதிய இடைக்கால உத்தரவில் இரண்டு வாரங்களுக்கு மனுதாரர்களுக்கு சாதகமாக தடையாணை வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட வேலை வாய்ப்பு உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து குன்றத்தூர் பேரூராட்சியில் பொதுசுகாதார பணியிடம் காலியாக உள்ள 4 பணியிடங்களுக்கு பட்டியல் வரப்பெற்று அதில் வழக்கில் உள்ள 1.திரு.பா.முருகன், 2.திரு.கோ.டில்லிகுமார், 3.திரு.சி.செல்வகுமார், 4.திரு.ம.முருகன் ஆகிய 4 பணியாளர்களுக்கு ஊதிய ஏற்றமுறையில் பணி நியமனம் செய்து செயல் அலுவலர், குன்றத்தூர் பேரூராட்சி நடவடிக்கை ந.க.எண்.14/2007 நாள்.20.12.2007ன்படி உத்திரவிடப்பட்டது.

இதர 4 பணியாளர்களில் அரசு ஆணை நிலை எண்.242/ந.நி.கு.வ/ நாள்.10.12.2009ன்படி 31.10.2008ல் பத்தாண்டு தினக்கூலி பணிக்காலம் முடித்த 1.திரு.பா.ராஜா, திரு.மு.சுப்பிரமணி, 3.திரு.என்.பக்கிரி ஆகிய 3 தினக்கூலி பணியாளர்கள் ஏற்றமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்டு 2 பணியாளர்கள் குன்றத்தூர் பேரூராட்சியிலும், 1 பணியாளர் பெருங்களத்தூர் பேரூராட்சியிலும் நியமனம் செய்யப்பட்டனர்.

மேற்படி வழக்கு தொடர்ந்த 8 தினக்கூலி பணியாளர்களில் மீதமுள்ள திரு.ப.மனோகரன் என்ற 1 பணியாளர் மட்டும் மேற்படி அரசாணையின்படி 31.10.2008ல் 10 ஆண்டுகள் பணிக்காலம் இல்லாததால் ஏற்முறை ஊதியத்தில் நியமனம் செய்ய தகுதியற்றவராக கருதப்பட்டு W.P.No.30670/2007ன் தீர்ப்பு நாள்.20.02.2014ன் தடையாணையின்படி தொடர்ந்து தினக்கூலியில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி 1 தினக்கூலி பணியாளரின் தடையாணையின் மீது அரசு வழக்கறிஞரிடம் மேல்முறையீடு செய்வதற்கான சட்டக்கருத்து கோரியதில் 19.08.2014 தேதிய அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்தில் மேற்படி வழக்கு W.P.No.30670/2007-ன் மீது மேல்முறையீடு செய்ய வலுவான ஆதாரங்கள் இல்லாததால் மேல்முறையீட்டிற்கு தகுதியற்றது என சட்டக்கருத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி தினக்கூலி பணியாளர் திரு.ப.மனோகரன் என்பவருக்கு குன்றத்தூர் நகராட்சியில் நாளது தேதி வரை தினக்கூலி வழங்கியமைக்கும் மற்றும் மே-2023ம் மாத தினக்கூலி வழங்கியமைக்கும் மற்றும் ஜூன்-2023ம் மாதத்திற்கான தினக்கூலி வழங்கவும் 31.05.2023 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தினக்கூலி வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1642/2023/எச்1)

**தீர்மானம் எண்.390 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.9**

குன்றத்தூர் நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தகவல், கல்வி (ம) விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு 6 எண்ணிக்கை பரப்புரையாளர்கள் மற்றும் 1 எண்ணிக்கை மேற்பார்வையாளர் ரீவார்டு சொசைட்டி நிறுவனத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வாயிலாக பணி செய்தமைக்கான பணிச்சான்று (Performance Certificate) அனுப்பப்பட்டு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (இ) தாம்பரம் அவர்களால் துய்மை இந்தியா திட்டம் 2.0 பரப்புரையாளர் மற்றும் மேற்பார்வையாளர் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ரீவார்டு சொசைட்டி என்கிற நிறுவனத்திற்கு பணி உத்திரவு ந.க.எண்.996/2020/B1நாள்.10.05.2022ன்படி 48 மாதங்கள் பணிபுரிய அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்19008/SBM/2.0/2022 நாள்.18.07.2022ன்படி அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாக நிதி வழங்கப்பட்டு மேற்கண்ட பணி நிறைவு பெற்றவுடன் பணி நிறைவு சான்று வழங்க உத்திரவிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் குன்றத்தூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் 6 பரப்புரையாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் அனுமதிக்கப்பட்டு பணி உத்திரவு பெறப்பட்ட ரீவார்டு சொசைட்டி நிறுவனத்தின் மூலம் பணியாளர் நியமிக்கப்பட்டு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் உத்தரவில் தெரிவித்துள்ளவாறு 48 மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்தி கொள்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கு தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து வழங்கவும், மேலும் இத்திட்டத்தின் கீழ் பணியாற்றி வரும் 6 பரப்புரையாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் ஆகியோருக்கு ரீவார்டு சொசைட்டி மூலம் குன்றத்தூர் நகராட்சியில் நாளது தேதி வரை ஊதியம் வழங்கியமைக்கும், மற்றும் மே-2023ம் மாதத்திற்கான ஊதியம் வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மற்றும் ஜூன்-2023ம் மாதத்திற்கான ஊதியம் வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஊதியம் வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1656/2023/எச்1)

**தீர்மானம் எண்.391 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.10</u>

குன்றத்தூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கான நகலெடுக்கும் இயந்திரம் (Canon Xerox Machine) பழுதடைந்துள்ளதால் (Repair in Canon Drum Unit) நகராட்சி அலுவலக பணிகள் பாதிக்கப்படுவதை தொடர்ந்து அவசர அவசியத்தினை முன்னிட்டு மேற்படி இயந்திரம் பழுதுநீக்கம் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும், பணி உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Incom Solutions நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1724/2023/இ1)

**தீர்மானம் எண்**.392 நாள்.30.06.2023

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.11**

குன்றத்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023 Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான BOV மற்றும் LCV வாகனங்களை சப்ளை செய்ய 13.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.Siva Steel Works நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 15 எண்ணிக்கையிலான பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (BOV) சப்ளை செய்யப்பட்டது.

மேற்காணும் விவரப்படி சப்ளை செய்யப்பட்ட பேட்டரியால் இயங்கும் வாகனங்களுக்கு நகராட்சியின் பெயர் மற்றும் திட்டத்தின் பெயர் (குன்றத்தூர் நகராட்சி - 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023 Tied Grant) பொறித்த ஸ்டிக்கர்கள் சப்ளை செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும், பணி உத்தரவு வழங்கவும், உத்தேச செலவினம் ரூ.20000/- (ரூபாய்.இருபதாயிரம் மட்டும்) வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2204/2022/இ1)

**தீர்மானம் எண்.393 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.12

குன்றத்தூர் நகராட்சியில் திட்டப்பணிகள் நடைபெறும் இடங்களில் மும்முனை மின் இணைப்பு பெறுதல் மற்றும் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் புதியதாக மின்கம்பம் அமைத்து மின்வடம் பொருத்துவதற்கு மின்வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து கீழ்க்காணும் விவரப்படி தொகை செலுத்தக் கோரி கேட்பு வரப்பெற்றது.

| வ.எண். | விவரம் | மின்வாரிய கேட்பு எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.26 பாலவராயன் குளக்கரை பகுதியில் (துர்கையம்மன் கோயில் தெரு மற்றும் அஷ்டலட்சுமி நகர்) புதியதாக மின்கம்பம் அமைத்து மின்வடம் பொருத்துதல் | 2340223491 / நாள்.30.03.2023 | 1,49,441/- |
| 2 | வார்டு எண்.26 SF No.108, திருமலை நகரில் புதியதாக மின்கம்பம் அமைத்து மின்வடம் பொருத்துதல் | 2340223488 / நாள்.05.04.2023 | 58,752/- |
| 3 | வார்டு எண்.26 SF No.187, சாய் அவென்யூ பகுதியில் புதியதாக மின்கம்பம் அமைத்து மின்வடம் பொருத்துதல் | 2340223489 / நாள்.05.04.2023 | 94,909/- |
| 4 | வெங்கடாபுரம் கிராமம், நடைபாதை தெரு, நில அளவை எண்.31/1ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படும் இடத்தில் மும்முனை மின் இணைப்பு வழங்குதல் | 10009-3050623598 நாள்.07.06.2023 | 27,372/- |
| 5 | வெங்கடாபுரம் கிராமம், நடைபாதை தெரு, நில அளவை எண்.31/2ல் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கப்படும் இடத்தில் மும்முனை மின் இணைப்பு வழங்குதல் | 10009-3050623599 நாள்.07.06.2023 | 27,372/- |
| | மொத்தம் | | 3,57,846/- |

எனவே மேற்காணும் விவரப்படி மும்முனை மின் இணைப்பு, புதிய மின்கம்பம் மற்றும் மின்வடம் பொருத்துவதற்கு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.3,57,846/- செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1681/2023/இ1)

**தீர்மானம் எண்.394 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.13</u>**

குன்றத்தூர் நகராட்சியின் 2022-2023ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.1810/2023/சி1)**

**தீர்மானம் எண்.395 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.14</u>**

குன்றத்தூர் நகராட்சியில் பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த செல்வி நாடக மன்றம், எண்.4/105, லஷ்மி நகர், சிக்கராயபுரம், சென்னை – 600069 மூலம் 18.06.2023 அன்று குன்றத்தூர் பேரூந்து நிலையத்தில் விழிப்புணர்வு நாடகம் நடத்தியமைக்கு மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி.காந்தா என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.5000/-ஐ வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) பொதுமக்கள் நலன்கருதி விழிப்புணர்வு நாடகம் நடத்தியமைக்கு பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1753 /2023/எச்1)**

**தீர்மானம் எண்.396 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

குன்றத்தூர் நகராட்சியில் தற்போது புதிய நகர்கள் உருவாகிவிட்ட காரணத்தால் பொதுசுகாதார நலனை கவனத்தில் கொண்டு 2021-2022ம் ஆண்டிற்கு பொதுசுகாதார பணி, குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு பணி, பூங்கா பராமரிப்பு பணி மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் பராமரிப்பு பணி ஆகியவற்றை மேற்கொள்ள ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த அன்னை தெரசா குழுவின் மூலம் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள தீர்மானம் எண்.44 நாள்.10.05.2021ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.7 நாள்.31.03.2022ல் மேற்காணும் இனத்திற்கு 31.03.2022 உடன் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி முடிவடைவதால் 2022-2023ம் ஆண்டிற்கு இப்பணிகளின் தொடர் அவசியம் கருதி மூன்று மாதங்களுக்கு 01.04.2022 முதல் 30.06.2022 வரை அல்லது புதிய ஒப்பந்தம் கோரி நடைமுறைக்கு வரும் வரை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தாரர்களுக்கு அதே விலைவிகிதத்தில் ஒப்பந்தப்பணி நீட்டிப்பு செய்ய மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.73 நாள்.30.06.2022ல் (01.07.2022 முதல் 30.09.2022 வரை) புதிய ஒப்பந்தம் கோரி நடைமுறைக்கு வரும் வரை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தாரர்களுக்கு அதே விலைவிகிதத்தில் ஒப்பந்தப்பணி நீட்டிப்பு செய்ய மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.139 நாள்.30.08.2022ல் 2022-2023ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியரின் சந்தை விலைப்படி மேற்படி குழுவிற்கு ஊதியம் வழங்க மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.310 நாள்.31.03.2023ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்:33553/2022/EA2-SWM-4, நாள்:10.01.2023-ன்படி ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளதால் இத்திட்டம் நடைமுறைக்கு வரும்வரை, இந்நகராட்சியில் ஏற்கனவே பொதுசுகாதார பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொண்டு வரும் நிறுவனங்களுக்கு தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி நடைமுறைக்கு வரும் வரை இப்பணியின் அவசர அவசியம் கருதி அன்னை தெரசா குழுவின் மூலம் குன்றத்தூர் நகராட்சி பகுதிகளில் பொதுசுகாதார பணி, குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு பணி, பூங்கா பராமரிப்பு பணி மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் மேற்படி நிறுவனம் மே-2023 மாதத்தில் (01.05.2023 முதல் 07.05.2023 வரை) பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொண்டமைக்கு பட்டியல் தொகை ரூ.87086/-ஐ வழங்க நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) அனுமதி வழங்கலாம்

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1665/2023/எச்1 )**

## தீர்மானம் எண்.397 நாள்.30.06.2023

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.378/1B, 379/1, 2, 3, 4 & 386/3-ல் அடங்கிய 2926 ச.மீ (0.72 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க M/s.VLC Enterprises & Real Estates rep. by its Proprietor திரு.B.லூர்துராஜ் பிரேம் GPA on behalf of திரு.குமரன் மற்றும் 5 நபர்கள், எண்.7, வாழ்க வளமுடன் காம்பளக்ஸ், பஜார் ரோடு, குன்றத்தூர், சென்னை - 600069 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும கடிதம் எண்.Layout-1/0047/2023 நாள்.08.06.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 19 எண்ணிக்கை மனைகளாக மனைப்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.162/2023 நாள்.08.06.2023ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது. எனவே மேற்படி நில அளவை எண்ணில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உரிய கட்டணங்கள் வசூலித்து நகராட்சியின் இறுதி அங்கீகாரம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) நகராட்சியின் இறுதி அங்கீகாரம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1615/2023/எப்1)

**தீர்மானம் எண்.398 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.17**

குன்றத்தூர் நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட்ட குடிநீர் அபிவிருத்தி பணிகளை 2023-2024ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | பூஜா அவென்யூ 3 போர்வெல் பைப்கள் மற்றும் பாலாஜி நகர் 2 போர்வெல்களில் உள்ள பைப்கள் பழுதானதை மாற்றியமைத்தல் | 200000 |
| 2 | மணிகண்டன் நகர் பகுதியில் போர்வெல் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 400000 |
| 3 | பூஜா அவென்யூ, சிவா விஷ்ணு நகர் பகுதியில் போர்வெல் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 800000 |
| 4 | செந்தாமரை நகர் மற்றும் பெருமாள் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் போர்வெல் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 800000 |
| 5 | பொன்னியம்மன் கோயில் பகுதியில் போர்வெல் அமைத்தல் மற்றும் திருவள்ளுவர் நகர் பகுதிகளில் போர்வெல் அமைத்தல் | 800000 |
| 6 | மேத்தா நகர் பகுதியில் போர்வெல் அமைத்தல் | 420000 |
| 7 | அறிவுசார் மையம் அருகில் உள்ள போர்வெல் ஒத்தவாடை தெரு வரை பைப்லைன் அமைத்தல் | 580000 |
| 8 | நடைபாதை தெரு போர்வெல் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 500000 |
| 9 | கண்ணம்மாள் நகர் பகுதியில் பைப்லைன் அமைத்தல் | 200000 |
| 10 | சூர்யா அனெக்ஸ் பிரதான சாலையில் பைப்லைன் அமைத்தல் பணி | 200000 |
| 11 | சூர்யா அனெக்ஸ் 1 முதல் 8 தெருக்கள் வரை பைப்லைன் அமைத்தல் பணி | 300000 |
| 12 | சூர்யா அவென்யூ வரை பைப்லைன் அமைத்தல் பணி | 400000 |
| 13 | தோப்பு தெரு பைப்லைன் அமைத்தல் பணி | 200000 |
| 14 | ஓம் சக்தி நகர் பிரதான சாலை மற்றும் 1 முதல் 5 தெருக்கள் வரை பைப்லைன் அமைத்தல் பணி | 220000 |
| 15 | கன்னியப்பன் நகரில் கைபம்பு அகற்றி புதிய மினிபவர்பம்பு அமைத்தல் மற்றும் முத்தாலம்மன் கோயில் தெரு, சத்தியமூர்த்தி நகர்-2 Nos, சேரன் தெரு, நாவிதர் தெரு, சேக்கிழார் நகர் அங்கன்வாடி ஆகிய இடங்களில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். | 500000 |
| 16 | சம்மந்தம் நகர் மெயின் ரோடு, மாணிக்கம் நகர் மெயின் ரோடு மற்றும் பாஸ்கரன் தெரு ஆகிய பகுதிகளில் பைப்லைன் அமைத்தல் | 250000 |
| 17 | சரஸ்வதி கார்டன் பகுதியில் பைப்லைன் அமைத்தல் | 120000 |
| 18 | மாணிக்கம் நகர் பகுதியில் போர்வெல் அமைத்தல் | 400000 |
| 19 | மேத்தா நகர் பகுதியில் பைப்லைன் அமைத்தல் | 700000 |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.197/2023/இ1)

## தீர்மானம் எண்.399 நாள்.30.06.2023

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.18</u>**

குன்றத்தூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கணிணி இயக்குபவர்கள் – 2 நபர்கள், ஓட்டுநர் – 2 நபர்கள், பொறியியல் பிரிவுக்கு தொழில்நுட்ப பணியாளர்கள் – 2 நபர்கள், சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு – 2 நபர்கள், பூங்கா பராமரிப்பிற்கு – 8 நபர்கள் மற்றும் மேல்நிலை தொட்டி பராமரிப்பு – 5 நபர்கள் என மொத்தம் 21 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.197/2023/இ1)**

## தீர்மானம் எண்.400 நாள்.30.06.2023

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.19</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 2022.23ம் ஆண்டிற்கான (01.07.2022 முதல் 31.03.2023 வரையிலான) ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்த அடிப்படையில் கணிணி இயக்குதல் பணி மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி.கே.அன்பரசி மற்றும் திருமதி.வி.சரஸ்வதி ஆகியோரினை ஈடுபடுத்திக் கொள்ள நகராட்சி மன்ற தீர்மானம் எண்.68 நாள்.30.06.2022ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.316 நாள்.31.03.2023ல் 2023-24ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் கணிணி இயக்குவதற்கு ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து சில நிர்வாக காரணங்களினால் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை.

எனவே அவசர அவசியம் கருதி ஜூன்-2023ம் மாதத்தில் ஏற்கனவே இந்நகராட்சியில் கணிணி இயக்குபவர்கள் மூலம் நகராட்சி கணிணியினை இயக்கியமைக்கு மாவட்ட ஆட்சியரின் சந்தை விலைப்படி ஊதியம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.197/2023/இ1)

**தீர்மானம் எண்.401 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.20</u>**

குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட குழல்விளக்குகள், சி.எப்.எல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் உயர்கோபுர மின்விளக்குகள் ஆகிய 2898 தெருமின் விளக்குகளை எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றம் செய்ய 27.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 22.02.2023 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் இதுவரை பணி துவங்காத நிலையில் பணி துவங்கப்படும் வரை தெருவிளக்கு பராமரிப்பின் அவசர அவசியம் கருதி தெருமின்விளக்கு உதிரிபாகங்கள் கொள்முதல் செய்துகொள்ளவும் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ.9.00 இலட்சம் செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.65/2022/இ1)

**தீர்மானம் எண்.402 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.21</u>

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் விவரப்படியான அடிப்படை வசதிப் பணிகள் 2023-2024ம் ஆண்டு பொதுநிதியில் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மீனவர் தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 19.50 |
| 2 | ராஜகணபதி நகர் மற்றும் குறுக்கு தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 12.00 |
| 3 | பாபா நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 14.70 |
| 4 | மேத்தா நகர் 5வது கிழக்கு குறுக்கு தெருவில் தார்சாலை அமைத்தல் | 9.50 |
| 5 | மேத்தா நகர் 5வது கிழக்கு தெருவில் தார்சாலை அமைத்தல் | 20.00 |
| 6 | மேத்தா நகர் 17வது தெருவில் தார்சாலை அமைத்தல். | 13.50 |
| 7 | ராஜகோபால் நகர் குறுக்கு தெருவில் வெட்மிக்ஸ் கொண்டு செப்பனிடுதல் | 9.50 |
| 8 | ராஜகோபால் நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல். | 20.00 |
| 9 | பாலவராயன் குளக்கரை 1வது தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 20.00 |
| 10 | பாலவராயன் குளக்கரை குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 20.00 |
| 11 | பாலவராயன் குளக்கரை தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 20.00 |
| 12 | நடைபாதை குறுக்கு தெரு மற்றும் பொன்னியம்மன் கோயில் தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல். | 2.50 |
| 13 | பெருமாள் கோயில் தெரு முதல் மலையடிவாரம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 7.20 |
| 14 | பல்லாவரம் சாலை முதல் தேவேந்திரன் நகர் வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 17.50 |
| 15 | ராஜேஷ் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 4.20 |
| 16 | தேவி நகர் குறுக்கு தெருவில் தார்சாலை அமைத்தல். | 5.60 |
| 17 | சந்தோஷ் அவென்யூ பூங்காவில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.50 |

| | | |
|---|---|---|
| 18 | சம்மந்தம் நகர் பூங்காவில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 18.00 |
| 19 | சேக்கிழார் நகர் பூங்காவில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.50 |
| 20 | சேரன் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து மினிபவர் பவர் பொருத்துதல். | 4.00 |
| 21 | வித்யாலஷ்மி நகர் பகுதியில் LED தெருவிளக்குகள் அமைத்தல் | 2.50 |
| 22 | நத்தம் சுடுகாட்டிற்கு எரிமேடை மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.50 |
| 23 | பெருமாள் கோயில் முதல் பொன்னி நகர் வரை தார்தளம் அமைத்தல் | 20.00 |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.197/2023/இ1)**

**தீர்மானம் எண்.403 நாள்.30.06.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**